# அறிவித்தல்

## அரச சேவை ஆணைக்குழு

## சுங்க பிரதி அத்தியட்சகர் பதவியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புதல்

2018.05.04 ஆம் திகதியிலுள்ளவாறு சுங்க பிரதி அத்தியட்சகர் பதவியில் தற்போது நிலவுகின்ற 271 வெற்றிடங்களை நிரப்பும் நோக்கில், விண்ணப்பம் கோரப்படுகின்ற முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள சுங்க உதவி அத்தியட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. ஆட்சேர்ப்பு முறை

அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக் குழுவொன்றின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றதொரு நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில், குறித்த அறிவித்தலில் விபரிக்கப்படுகின்ற தகைமைத் தேவைப்பாடுகளை நிறைவேற்றியுள்ள வேட்பாளர்களிலிருந்து, காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமையவும் மூப்புரிமையின் அடிப்படையிலும், மேற்படி ஆட்சேர்ப்பு இடம்பெறவுள்ளது.

### 02. தேவையான தகைமைகள்

2.1 தொழில்வாண்மைத் தகைமைகள்

i. சுங்க உதவி அத்தியட்சகர் தரம் - I பதவியில் நிரந்தர நியமனமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பப்படிவ முடிவுத்திகதிக்கு உடனடியாக முன்சென்ற ஐந்து (05) வருட காலப்பகுதியில் ஒரு செயலூக்கத்துடனான திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டுமென்பதுடன், எந்வொரு வடிவிலான ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் உட்படாதிருத்தலும் வேண்டும்.

iii. பதவி உயர்வுத் திகதிக்கு உடனடியாக முன்சென்ற குறித்த ஐந்து (05) வருடகாலப்பகுதியில் சகல சம்பள உயர்வுகளையும் உழைத்திருத்தல் வேண்டும்.

iv. விண்ணப்பப்படிவ முடிவுத்திகதிக்கு உடனடியாக முன்சென்ற குறித்த ஐந்து (05) வருடகாலப்பகுதியில், அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டத்திற்கு இணங்க, சராசரியான அல்லது அதற்கும் கூடிய செயலாற்றுகை மட்டமொன்றை தமது சேவையில் காண்பித்திருத்தல் வேண்டும்.

### குறிப்பு

“இருப்பினும், மேலே பந்தி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள முன் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள தேவையான எண்ணிக்கையிலான அலுவலர்கள் இல்லாமையினை கருத்திற்கொண்டு சுங்க பிரதி அத்தியட்சகர் பதவியில் வெற்றிடமொன்று காணப்படும் பொழுது, சுங்க உதவி அத்தியட்சகர் பதவியின்

தரம்-I மற்றும் தரம்-II ஆகிய பதவிகளில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மிகவும் சிரேஷ்ட அலுவலர்கள், ஏனைய முன்-நிபந்தனைகளை நிறைவுசெய்வதன் பேரில், சுங்க அத்தியட்சகர் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கான தகைமையினைப் பெறுகின்றார்''.

## 2.2 பௌதீகத் தகைமைகள்

ஒவ்வொரு வேட்பாளரும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் தமது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குமான உடல் மற்றும் உள ரீதியான தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## 2.3 ஏனைய தகைமைகள்

(அ) இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.

(ஆ) சிறந்த நன்னடத்தைக்குரிய பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) வேட்பாளர்கள் மேற்படி பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக கோரப்பட்டுள்ள அனைத்து தகைமைகளையும், விண்ணப்ப முடிவுத்திகதியில் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

## 03. சேவை மற்றும் நியமனம் பற்றிய நிபந்தனை

i. இந்த பதவி நிரந்தரமானதாகும்.
ii. இந்த நியமானது ஒரு வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டிருக்கும்.
iii. இந்த நியமனமானது அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறைசார் ஒழுங்குவிதிகள், நிதிப் பிரமாணங்கள், தாபனக் கோவைகள், திணைக்களக் கட்டளைகள் மற்றும் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் வெளியிடப்படவுள்ள ஏனைய கட்டளைகள் ஆகியவற்றில் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாகும்.
iv. 01/2014 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை மற்றும் சம்பந்தப்பட்ட சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கு இணங்க, அரச மொழிக் கொள்கை பற்றிய தேர்ச்சியை அடைந்துகொள்ளல் வேண்டும்.

**04.** **சம்பளத் திட்டம்**

இப் பதவிக்கு ஏற்புடைய மாதாந்த சம்பளம் பின்வருமாறு :-

ரூபா 41,580 – 11X 755-18 X 1030- 68,425/- (25.02.2016 ஆம் திகதிய3/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் MN 7 - 2016)

**05.** **வேட்பாளர்களின் ஆளடையாளம்**

உரிய முறையில் பூரணப்படுத்திய விண்ணப்பங்களை அனுப்பியுள்ள வேட்பாளர்கள் மாத்திரம் குறித்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

அனைத்துச் சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகளும் உரியவாறு சான்றுப்படுத்திய நகல் பிரதிகளும் நேர்முகப் பரீட்சையின் பொழுது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

வேட்பாளரின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் அடையாள அட்டைகள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்:

1. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.
2. செல்லுபடியான கடவுச்சீட்டு

**06.** (அ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 2018.07.06 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். உரிய காலத்திற்குப் பின்னர் பெறப்படுகின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பத்தின் ஒரு மாதிரிப் படிவமானது இந்த அறிவித்தலின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது. வேட்பாளர்கள் தமது விண்ணப்பப் படிவத்தை ஏ4 அளவுக் கடதாசியில் தாமாகத் தயார்செய்து தமது கையெழுத்துப்பட பூரணப்படுத்துதலும் வேண்டும்.

(இ) விண்ணப்பத்தின் கடித உறையின் மேல் இடது மூலையில்“சுங்க பிரதி அத்தியட்சகர் பதவிக்கு ஆட்சேர்த்தல்” என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(ஈ) அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை தற்போது சேவையாற்றுகின்ற பணிப்பகத் தலைவர்கள் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

(உ) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படக்கூடும்.

விண்ணப்பப்படிவ இழப்புகள் மற்றும் தாமதங்கள் போன்ற அஞ்சல் தொடர்பிலான முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

**07. பொய்யான தகவல்களைச் சமர்ப்பித்தல்**

- நீங்கள் உங்களது விண்ணப்பப் படிவத்தில் வழங்கிய ஏதேனும் தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டறியப்படின், உங்களது வேட்புரிமையானது இரத்துச் செய்யப்படுவதற்கு ஏற்புடையதாகும். அத்தகைய தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்படின், நீங்கள் சம்பந்தப்பட்ட நடைமுறைகளின் கீழ் சேவையிலிருந்து நீக்கம் பெறுவதற்கு ஏற்புடையவராவீர்.

- நியமனம் செல்லுபடியாகும் திகதி மற்றும் நியமனங்களின் எண்ணிக்கை ஆகியன அரச சேவை ஆணைக்குழவினால் தீர்மானிக்கப்படும். எந்த எண்ணிக்கையான வெற்றிடங்களையும் அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கான அதிகாரத்தை அரச சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது.
- இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையில் எந்தவொரு முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரச சேவை ஆணைக்குழுவின் ஆணையின் படி

செயலாளர்
நிதி அமைச்சு
கொழும்பு 01